1978 மார்ச் 31]

நடுநிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 18-7-1977 ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1219 ஆம் எண்ணுள்ள அரசாணை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் (Middle Schools) தலைமை ஆசிரியர்களுக்குப் பொருந்துகையில் நகராட்சி நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்குப் பொருந்தவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கான முன்னுரிமை விதிமுறைகளை கருத்தில் கொண்டு 18-7-1977 தேதியிட்ட அரசாணை நிலை எண். 1219 வெளியிடப்பட்டுள்ளது. நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இதேபோன்ற நடைமுறையை அமுல்படுத்தத் தக்கதான ஒரு ஆணையை வெளியிடும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

Alagappan Nagar
Residents' Association.

* 234 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether representations have been received from the Alagappan Nagar Residents' Association (i) requesting permission to secede from the Madurai Corporation and (ii) to create a separate Panchayat;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken thereon?

அழகப்பன் நகர் குடியிருப்போர் சங்கம்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அழகப்பன் நகர் குடியிருப்போர் சங்கத்திடமிருந்து (i) மதுரை மாநகராட்சியிலிருந்து விலகுவதற்கு அனுமதி வேண்டியும்,

(ii) தனியாக ஊராட்சி ஒன்று அமைக்க வேண்டியும், விண்ணப்பம் எதும் அரசிற்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம். மதுரை மாநகராட்சியில் பெறப்பட்டுள்ளது.

(இ) மதுரை மாநகராட்சி அடிப்படை வசதிகளைச் செய்வதில்லை என்ற காரணத்தைக் கூறி முறையீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) அரசுக்கு இதுபற்றி குறிப்பு ஒன்றும் வரப்பெறவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-40)

2. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தி எட்டாவது அறிக்கையை அளித்தல்.

திரு. ஆர். சக்திமோகன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் தலைவர் சார்பில் அரசு உறுதி மொழிக் குழுவின் இருபத்தி எட்டாவது அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

3. அரசின் தீர்மானம்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது விவாதம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சென்னை மத்திய சிறைச்சாலையில் 1976 பிப்ரவரி முதல் 1977 பிப்ரவரி வரையிலான கால அளவில் அரசியல் கைதிகளைக் கொடுமைப்படுத்தியதாகவும், அடித்ததாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட மாண்புமிகு திரு. எம். எம். இஸ்மாயில் அவர்களின்